Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17
வேணு : 21 ஜூன் 2016 கானம் : 11



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 21 ஜூன் 2016 கானம் : 11

Delivered by India Post www.indiapost.gov.in





மே 11 திருவல்லிக்கேணி ஸ்ரீ பாண்டுரங்கன் கோவில் சம்ப்ரோக்ஷணம்







ஏப்ரல் 25
மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் சம்ப்ரோக்ஷணத்தன்று




மே 9 – சிதம்பரம்
ஆனந்த நடன சபேச வேதபாடசாலை வித்யார்த்திகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழா







மே 13-22 மதுரபுரி ஆஸ்ரமத்தில் வசந்தோத்ஸவம்



ஏப்ரல் - மே - அமெரிக்காவில் சத்சங்கங்கள் - பூர்ணிமாஜி



மே மாதம் வளைகுடா நாடுகளில் கார்பரேட் பயிற்சி வகுப்புகள் - ராமானுஜம்ஜி





ஏப்ரல் 27-29 டாக்டர்.பாக்யநாதன்ஜி
திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில்
'பாகவத தர்மம்' - உபன்யாசம்

மே 1
திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில்
நமது கோபகுடீர சத்சங்க குழந்தைகளின் பக்த மீரா நாடகம்



ஸ்ரீ ஹரி :

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 ஜூன் 2016 கானம்: 11

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-243 | 05 | அத்வைத மோக்ஷம் | 18 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 10 | ரூபகோஸ்வாமி | 24 |
| நமது சங்கத்தின் தத்வம் | 12 | வீடு தேடி வருவான் விட்டலன் | 26 |
| நாமம் சொன்னால் பாவங்கள் அண்டாது | 13 | பாலகர்களுக்கு ஒரு கதை | 29 |
| | | ப்ருந்தாவன கண்ணன் | 34 |
| சேங்கனூர் | 14 | புது வெளியீடுகள் | 36 |


ஒரு காரியத்தை செய்யும்போது, அதை செய்தால் என்ன நடக்கும்; செய்யாமல் இருந்தால் என்ன நடக்கும் என்று இரண்டையுமே நன்றாக யோசித்து, பிறகு காரியத்தில் ஈடுபட வேண்டும். பிழைப்பு இல்லாமல் போகுமே என்ற பயம், தாழ்ந்த மனிதர்களுக்கு இருக்கிறது. மரணமடைந்து விடுவோமோ என்ற பயம், நடுத்தரமானவர்களுக்கு இருக்கிறது. அவமானம் வந்து விடக்கூடாது என்ற அச்சம், மேலானவர்களுக்கு இருக்கிறது. இந்த மூன்றாவது அச்சம்தான் நல்லவர்களுக்கு (உமக்கு) வர வேண்டும்.

- மஹாபாரதம் உத்யோக பர்வா 3ஆம் அத்யாயம்

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் - குந்தலவராளி                    தாளம்: ஆதி

பல்லவி

பாண்டுரங்கா பாண்டுரங்கா என்று பாடிவந்தேனே
உன் ஸந்நிதி நானும் தேடி வந்தேனே
(பாண்டுரங்கா ..)

அனுபல்லவி

ஆண்டாண்டு காலமாய் அடியார் பலர் உனை
கண்டு கண்டு ஆடிப் பாடி பரவசமடைந்தனரே
(பாண்டுரங்கா ..)

சரணம்

சங்கைக் கையில் கொண்ட பங்கயக் கண்ணாளனே
அங்கம் முழுவதிலும் அடியாரைக் கொண்டவனே
அபங்க கீர்த்தனத்தில் ஆனந்திப்பவனே
நீங்காமல் என் இதயத்தில் நிலை பெற்று நின்றிடுவாய்
(பாண்டுரங்கா ..)

முன்அட்டை: வசந்தோத்ஸவத்தின் பொழுது மதுரபுரி ஆஸ்ரமம் கன்யாகுமரி ஸ்ரீ ஜயஹனுமான் சன்னதி - மே 13-22

பின் அட்டை- யோகிராம்சுரத்குமார் ஆலய சம்ப்ரோக்ஷண மண்டல பூர்த்தி தினம் - மே10



# மதுரமான மஹனீயர் – 243

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

எல்லா காலத்திலும், எல்லா சந்தர்ப்பங்களிலும், சூழ்நிலைகளிலும், மனதிற்கும் சரீரத்திற்கும் ஹிதமாக இருக்க கூடிய ஒன்று இருக்குமானால், அது இனிமையான குருவின் ஸ்மரணமும், அவர் அருட்நிழலில் வாழ கிடைக்கும் வாய்ப்பும், அவர் உபதேசங்களின்படி வாழ்வதுமே ஆகும். சர்வத்தையும் ஈஸ்வரனாக பார்த்த மஹான்களும் கூட, ஏன் தெய்வத்தை பிரத்யக்ஷமாய் அனுபவித்தவர்களுமே கூட, குருவாக அந்த தெய்வம் வரட்டுமே என்றுதான் பிரார்த்திக்கிறார்கள். குரு என்பவர் தேடி கண்டுபிடிக்க இயலாதவர்; எனினும், சரியான பிரார்த்தனைக்கு மட்டும், தன் கருணையால் வசப்படக்கூடியவர்.

அந்த குருவின் ஸ்மரணம்தான் ஔஷதங்களில் சிறந்தது. எல்லா காலத்திலும் செய்யக்கூடியது. எப்பொழுதும் நன்மையை மட்டுமே செய்யக்கூடியது. இதற்கு இணையானது ஒன்றும் இல்லை. எனக்கு ஒன்றுமே தெரியாது; நான் எதற்கும் லாயக்கு இல்லை என்பவர்களும், என் வாழ்வில் எப்பொழுதுமே இருள்தான் சூழ்ந்துள்ளது என்பவர்களும், வாழ்க்கையில் எப்பொழுதுமே துக்கம் அனுபவிப்பவர்களும் கூட, மிக எளிதில், மிக நிச்சயமாக பலன் பெற கூடிய ஒரு வழி இருக்குமானால் அது சத்குரு ஸ்மரணம்தான். குருவின் ஸ்மரணம்தான், மதுரஸ்மரணம். குருவின் மதுரஸ்மரணமும், அவர் உபதேசிக்கும் நாம ஸ்மரணமும் இருந்து விட்டால் அதை விட ஆனந்தம் என்ன இருக்க முடியும்?

எதிர்காலம் வறண்டு விட்ட வாழ்க்கையில், சட்டென ஒரு ஒளியை தந்து, வாழ்க்கையை புரட்டி போட்டு, வசந்த காலத்தை அழைத்து வந்து விடுவது அந்த குருநாதர் ஸ்மரணம்தான். அப்படிப்பட்ட குருவை வாழ்வில் அடைந்தோர் பாக்யசாலிகள் என தெள்ளத்தெளிவாக கூறி விட முடியும்.

வாழ்க்கைக்கு குருவின் ஸ்மரணம், ஒரு புது விளக்கத்தை தருகிறது. விடை தேட முடியாத கேள்விகளை தள்ளி விட்டு, லட்சியத்தை மாற்றி, அதை சித்தமாகவும் தானே செய்து தருவதுதான் குருவின் சரணம்.

எல்லை இல்லாத தெய்வம், தன் கருணையின் காரணமாக குரு எனும் வடிவம் தாங்கி வருகிறது. புரிந்து கொள்ள முடியாதது தெய்வம்; புரிந்து கொள்ள கூடிய இலக்கணங்களை தன்னிடம் தானே வகுத்து கொண்டு வருபவரே குரு. குருவின் அருள் எப்படி வேண்டுமானாலும் செயல்படும். அதற்கு காரணமோ, பாரபட்சமோ, விருப்பு, வெறுப்போ, கால நிர்ணயமோ கிடையாது. அருள் வேண்டுமா என்பது மட்டுமே கேள்வி. வேண்டும் எனில் அருள்நிழல் நிச்சயம் கிடைக்கும். மாடு பால் கறப்பது என்பது அதன் சுபாவம் மட்டுமல்லாது அதற்கு சுகமும் கூட; அதுபோல் சத்குருவிற்கு அருள் என்பது சுபாவம்; ஜீவன் பெறும் துக்க நிவர்த்தியால், சுகானுபவமும் அங்கு உண்டு.

தீராத கஷ்டம் என்று உலகில் ஒன்றுமே இல்லை. கஷ்டம் என ஒன்று இருந்தால், அதற்கு தீர்வு என்பதும் நிச்சயம் இருக்கும் என குருநாதர் சொல்வார்கள். ஆயின், தீர்வை எங்கே தேடுகிறோம் என்பதை பொறுத்தே முடிவுகள் அமைகின்றன.

ஒளி தரும் விளக்கானது, இரவில் உறங்குவதற்கு தடையாக அமைகிறது. கார் காலத்தில் இதமாக இருக்கும் ஆதவன், சித்திரை மாதம் சகிக்க முடியாத உஷ்ணம் தருகிறான். பயணம் செய்வது சுகம் என்றாலும், தொடர்ந்து பயணம் செய்தால் களைப்பு வருகிறது. ஆகாரம் நன்றாக இருந்தாலும், ஒரு அளவிற்கு மேல் சாப்பிட முடியாது. அகண்ட நீல வானமும், ஆழ்கடலும், மலை உச்சியும் ரசிக்க உகந்தவை எனினும், இயற்கை பேரழிவுகளின்பொழுது அவற்றை ரசிக்க முடிவதில்லை. தவிரவும், உற்றாரினால் சுகம் வருவது போல், துக்கமும் சம்பவிக்கிறது. தம்பதிகள் செய்யும் காரியங்கள் ஒருவருக்கொருவர் பாதிக்கின்றன.

ஆக சுகம் தரும் ஒன்று எப்பொழுதும் சுகம் மட்டுமே தருவதாக இல்லை. யார் மூலமாக அல்லது எதன் மூலமாக சந்தோஷம் வருகிறதோ அதன் மூலமாகவே உலகில் துக்கம் வருகிறது. வாழ்க்கையின் விளையாட்டு இது.

சிவகாசியில் ஒரு அன்பர் ஸ்ரீஸ்வாமிஜியிடம் மிகுந்த அன்பு பூண்டவர். குருநாதரை மிகவும் பக்தியுடன் பூஜித்து நாமம் சொல்லி வருபவர். அவர் வீட்டில் ஒரு பெண்மணி

வேலை பார்த்து வருகிறார். அவர் சில காலமாய் தனது பெண்ணை பற்றி மிகவும் கவலை கொண்டிருந்தார். என்னவென விசாரிக்கையில், தன் மகள் மருத்துவமனை ஒன்றில் கணவனுடன் சேர்ந்து வேலை பார்த்து வருவதாகவும், அவளது மண வாழ்க்கை சரியில்லை எனவும் சொல்லி அழுதாள்.

சத்சங்க அன்பருக்கு எப்பொழுதுமே குருவருளின் வல்லமை தெரியும். அதனால் என்ன விஷயம் என கேட்கவே, அந்த அம்மாள் கொட்டி தீர்த்து விட்டாள். தினம் தினம் தன் பெண்ணின் கணவன் மதுபானம் குடித்து விட்டு வந்து, அடித்து உதைத்து துன்புறுத்துவதாகவும், பல வருடமாகியும் திருந்தவே இல்லை என்றும், என்ன செய்வதென தெரியவில்லை என ஒரு தாய்க்கே உரிய கவலையும் பரிவும் பொங்க தன் மன வேதனையை தெரிவித்தாள். மேலும் சொல்கையில், ஒருநாள் அப்படி அடிக்கையில், தன் பெண்ணின் மாமியாருக்கே பலமாக அடிபட்டு விட்டதாகவும், அவர் கண் பார்வையே பறி போய் விடும் அளவிற்கு ஆகி விட்டதாகவும் சொன்னார். எப்படியோ ஒரு மருத்துவரின் உதவியால் அந்த கண்பார்வை சரியாகி விட்டது என்றும், தன் பெண்ணிற்கு ஏதாவது ஆகி விடுமோ, அல்லது வேறு யாருக்காவது ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தாலோ என்ன செய்வது என்றும் சொல்லி புலம்பினார். நியாயமானதுதானே?

காவல் நிலையம் சென்று புகார் செய்தாயிற்று. அந்த நடவடிக்கைக்கு பலன் இல்லை. வேறு வழியின்றி தான் தன் பெண்ணை விவாகரத்து செய்து கொள்ள சொல்லி விட்டேன் என்று சொல்லி அந்த பெண்மணி அழுதிருக்கிறார். 'ஒரு மாதம் தனித்திருந்தால் போதும்; நானே விவாகரத்து வாங்கி தருகிறேன்' என அனுதாபப்பட்ட ஒரு மருத்துவர் உதவிக்கு வந்திருப்பதாகவும் சொன்னார். இந்த நடவடிக்கை அவசியம் எனினும், அவர் மனம் கேட்கவில்லை. அவர் மனம் படபடவென அடித்துக்கொண்டது. விஷயம் கேள்விப்பட்ட, அந்த குடிகார கணவருக்கும் விவாகரத்தில் இஷ்டமில்லை என தெரிய வந்தது. ஆனாலும் குடிப்பழக்கம் விடவில்லை. பெண்ணிற்கும் சரியான முடிவெடுக்க முடியாத நிலைமை. இந்த

தருணத்தில்தான் அந்த அம்மாள் நம் சத்சங்க அன்பரிடம் சொல்லி புலம்புமாறு அமைந்திருந்தது.

எல்லாம் கேள்விப்பட்டு மிகவும் வருத்தமுற்ற நமது சத்சங்க அன்பர், குருநாதரின் மகிமை மற்றும் நாம மகிமையை எடுத்து சொல்லி, பிரார்த்தனையும் நாமமும் சேர்ந்தால் குருவின் அருள் நிச்சயம் கிடைக்கும் என சொல்லி நம்பிக்கையுடன் தீராத வினை தீர்க்கும் நாமஜபத்தை செய்ய சொன்னார். அவரும் ஒரு வாரம் தொடர்ந்து வணங்கி ஸ்ரீஸ்வாமிஜி திருவுருவம் முன்பு மஹாமந்திர கீர்த்தனம் செய்து தினமும் மனமுருகி பிரார்த்தனை செய்து வந்தார்.

சூழ்நிலைதானே மனிதனை மாற்றுகிறது. அந்த அம்மாவும் ஏதாவது சூழ்நிலை மாறி, மருமகன் மாற மாட்டாரா என உளமாற எதிர்பார்த்தார். அதையேதான் அவர் பிரார்த்தனையாகவும் செய்தார்.

ஒரே வாரம்தான் ஆகி இருக்கும். அந்த கணவன் தன் சொந்த ஊருக்கு ஏதோ அலுவலாக சென்றான். போன இடத்தில் திடீரென நாய் கடித்து விட்டது. அதற்கு வைத்யம் செய்யவோ, ஒத்தாசையாக இருக்கவோ எந்த ஒரு உறவினரும் வரவில்லை; அவருக்கு பயம் மேலிட்டது. உலகத்தின் உண்மை புரிந்தது. அவசர அவசரமாக சிவகாசி வந்து மனைவியிடம் சொல்ல, அவர் டாக்டரிடம் அழைத்து சென்று தகுந்த வைத்யமும், சொஸ்தமாக உதவியாகவும் இருக்க ஆவன செய்தார். சீக்கிரம் சரீரத்திற்கு வந்த கஷ்டம் விலகியது. அவர் குணமானார். அந்த ஓரிரு நாட்களில் அந்த கணவர், தாம் மனைவிக்கும் தன் தாய்க்கும் செய்த கொடுமைகளை நினைத்து வருந்தி, தமக்கு ஆதரவாக மனைவி மட்டுமே வந்தார் என்பதை உணர்ந்தார். அவர் மனமும் குணமானது. குடிப்பழக்கத்தை உதறி தள்ளினார். அவர் இப்பொழுது ஒழுங்காக குடும்பம் நடத்தி வருகிறார்.

இது கேட்பதற்கு ஒரு சாதாரண விஷயமாக நமக்கு தோன்றலாம். ஆனால் அந்த அம்மாள் அதை சாதாரணம் என நினைக்கவில்லை. உலக வாழ்க்கை துன்பத்தில் கஷ்டப்பட்டு தவிப்பவருக்குத்தானே, அதிலிருந்து கிடைக்கும் விடுதலையின் நிம்மதியின் அருமை புரியும்!

கடவுளிடம் செய்யும் பிரார்த்தனையானது, சூழ்நிலைகளை மாற்றி தீர்வுகளை தருகிறது. அந்த அம்மாள், தான் செய்யும் பிரார்த்தனை, குருவிற்கு கேட்கிறது என மனப்பூர்வமாக நம்பினார்.

நாமம் சொல்லி பிரார்த்தனை செய்தார் அல்லவா? நாமம் பிரபஞ்சத்தில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணும் என குருநாதர் சொல்வார்கள் அல்லவா? நாமத்துடன் செய்த பிரார்த்தனை, பிரபஞ்சத்தில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்து, சாதகமான சூழலை உருவாக்கி தந்து விட்டது.

தற்காலிகமாக சூழ்நிலையையும், அதன் மூலம் மனதையும் சரியானபடி மாற்றி, ஒரு சுமுக சூழலை கொண்டு வந்து, அனைவரையும் பகவத் ஸ்மரணையில் ஈடுபட செய்வது குருவருள் என்பது நமக்கு தெரியாததா என்ன!



"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: Guruji Sri Muralidhara Swamigal Mission, Plot No.11, Door No. 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83. மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


**தங்களின் கவனத்திற்கு - முக்கிய அறிவிப்பு**

**ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் இயங்கும் டிரஸ்டுகளின் நிர்வாக அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.**

புதிய முகவரி: **Plot no. 11, Door No 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.** அனைத்து தொடர்புகளையும் இம்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம்.




# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: எனக்கு மஹாமந்திர கீர்த்தனத்தின் அருமை எப்பொழுது புரியும்?

பதில்: நல்ல கோடை வெப்பத்தில், பல கிலோமீட்டர் தூரம் பயணம் செய்த ஒருவன் களைத்து வெப்பத்தால் துவண்டு போயிருப்பான். அந்த நேரத்தில், அவனுக்கு உணவை காட்டிலும் குளிர்ந்த நீர் பருகுவதுதான் அவனுடைய உடலின் அயர்ச்சியை குறைக்கும். அதுபோல் சம்சார துக்கத்தால் மனதில் வேதனை ஏற்பட்டு நிம்மதி இல்லாமல் தவிக்கும் ஒருவனால், மஹாமந்திரத்தின் அருமையை நன்றாக உணர முடியும்.

கேள்வி: ரமண மஹரிஷிகள், தன்னுடைய பக்தர்களின் உலக விஷயமான பிரச்சனைகளை செவிமடுத்து, அதற்கு பதில் சொல்லியது இல்லையே! ஏன்?



பதில்: அவர் அத்வைத சித்தாந்தத்தையே போதித்து வந்தார். அவருடைய சித்தாந்தப்படி உலகமே பொய்; அதாவது, இல்லாத ஒன்று. உலகம் பொய் என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டு பொய்யான உலகத்தின் பிரச்சனைகளை கேட்டு அதற்கு அருள்வது என்பது அவருடைய உபதேசத்திற்கு முரண் ஆகும் இல்லையா? அதனால்தான் அவர் அவ்வாறு செய்யவில்லை.

## கீர்த்தனமும் நர்த்தனமும் –நல்ல ஹரி

ஸ்ரீமத் பாகவதத்தில் பகவான் கோபிகைகளின் நடுவில் இருந்து திடீர் என்று மறைந்து விட்டான். பகவானை பிரிந்த கோபிகைகள் செய்வதறியாது திகைத்தனர். ஸ்ரீக்ருஷ்ண விரஹத்தினால் துடித்தனர். அவர்கள் அப்பொழுது பகவான் செய்த லீலைகளை எல்லாம் ஸ்மரித்து தங்களுக்குள்ளாகவே அனுகரணம் செய்தனர். ஒரு கோபி காளியனாக படுத்து கொள்ள, ஒரு கோபி அவள் மேல் பகவானாக நின்று ஆடுவாள். ஒரு கோபி பகவானாக நின்று வேணு கானம் செய்ய, நிறைய கோபிகைகள் பசுவும் கன்றுகளுமாக அவளை சூழ்ந்து கொள்வார்கள். இப்படியாக பகவான் செய்த பல லீலைகளையும் தங்களுக்குள்ளாகவே பாவத்துடன் அபிநயம் செய்தார்கள். பிறகு அனைவரும் சேர்ந்து ஒரு இடத்தில் அமர்ந்து கோபிகா கீதமும் பாடினார்கள். பகவானும் மீண்டும் அவர்கள் நடுவில் தோன்றினான். இதிலிருந்து நம்மிடமிருந்து மறைந்திருக்கும் பகவானை தரிசனம் செய்ய, சுலபமான வழி, அவனுடைய லீலைகளை ஆடிப்பாடுவதே ஆகும் என்று புரிகிறது.

## ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் சிந்தனை மலர்கள்

நமக்கு வெளிப்படையாக பெரிய துக்கம் இல்லாத பொழுதும் கூட நமக்கு உரிய கவனிப்பு இல்லை; தனக்கு முக்கியத்துவம் கிடைக்கவில்லை என்றெல்லாம் நம்மை நாமே துன்பத்திற்கு உள்ளாக்கி கொள்கின்றோம்.

‘குருநாதா! தாங்கள் மட்டும் எனக்கு எப்பொழுதும் காரணம் இல்லாமல் க்ருபை செய்கின்றீர்கள். ஆனால் நானோ எப்பொழுதும் தங்களிடம் ஏதாவது ஒரு காரணமாகத்தான் பக்தி செய்கின்றேன்’.

# நமது ஸங்கத்தின் தத்வம்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் உபதேசிக்கும் மார்க்கம் அத்வைதமா, விசிஷ்டாத்வைதமா அல்லது அசிந்த்ய பேதபேதமா என்று பலர் கேள்வி கேட்பதுண்டு. இத்தகைய கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருள்மொழி என்ன என்று கேட்கையில், அவர் அருளியது இதுதான்.

வேதத்தை ஒப்புக்கொள்ளும் மதங்களில் கூட, தெய்வம் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளாத மதங்கள் உண்டு. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்ற மூன்று பிரதான தத்வங்கள் பற்றி நாம் நிறைய கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் வல்லபாச்சார்யார் செய்த சுத்தாத்வைதம், அஸ்ஸாமின் சங்கரதேவர் செய்த ஏக தெய்வ வாதம், அப்பைய்ய தீக்ஷிதர் செய்த சிவாத்வைதம் என மேலும் பலப்பல தத்வங்கள் உலகில் உண்டு.

அத்வைதத்திலேயே கூட அஜாத வாதம், சிருஷ்டி திருஷ்டி வாதம், திருஷ்டி சிருஷ்டி வாதம் என பல உட்பிரிவுகள் உண்டு. அதேபோல, வைணவ சம்பிரதாயத்திலும் வடகலை, தென்கலை என இரு பெரிய பிரிவுகள் உண்டு.

இவற்றை எல்லாம் ஸ்தாபித்தவர்கள் பெரிய ஆச்சாரியர்கள், மஹான்கள். ஆதலின் அவர்களை நாம் விமரிசிப்பதோ ஆக்ஷேபிப்பதோ இல்லை என ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மொழிந்தார்கள்.

சரி; அப்படி எனில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் உபதேசிக்கும் வழிதான் என்ன?

மஹாமந்திர கீர்த்தனம் செய்து, எது உயர்ந்ததோ அதை அடைவது. எது உயர்ந்தது என்பது கிருஷ்ணனின் முடிவு. இதுவே நமது பிலாஸபி(**Philosophy**) என்றார்கள்.

## *ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உரைகளிலிருந்து*

ஒரு ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். நல்ல அழகான தோற்றமும் குறுகுறு என்ற பார்வை உடைய அந்த சிறுவன் எல்லோரிடமும் அன்பாய் பழகி வந்தான். ஒருமுறை அந்த ஊரிலும் அதை சுற்றியுள்ள இடங்களிலும் பெரும் மழை பெய்தது. அந்த சமயம் ஒருநாள் அந்த சிறுவனின் வீட்டருகில் ஏதோ ஒரு முனகல் சப்தம் கேட்டது. அந்த சிறுவன் அங்கு சென்று பார்த்தபொழுது, ஒரு சிங்கக்குட்டி மழையில் நனைந்தபடி அங்கு நின்று கொண்டிருந்தது. இயற்கையிலேயே இரக்க குணம் உடைய அந்த சிறுவன் அதை தன் வீட்டிற்கு எடுத்து வந்து வளர்த்து வந்தான். அந்த சிங்கக்குட்டியும் நன்கு வளர்ந்து அவனிடம் செல்லப்ராணி போல் பழகலாயிற்று.

அந்த சிறுவன் எங்கு சென்றாலும், வளர்ந்த அந்த சிங்கமும் கூடவே வரும். ஒருமுறை அவன் தன் ஊருக்கு அருகில் உள்ள காட்டு வழியாக செல்ல நேர்ந்தது. காடு என்றாலே அங்கு புலி, கரடி, சிறுத்தை போன்ற துஷ்ட மிருகங்கள் இருக்கும் அல்லவா? அந்த மிருகங்கள் காட்டில் தனியாக அந்த சிறுவன் வருகிறான் என நினைத்து அவனை அடித்து சாப்பிட ஒவ்வொன்றாக சிறுவனின் அருகில் வந்தன. ஆனால் நெருங்கி வந்த அவைகளுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. ஆம்! அந்த சிங்கம் சிறுவனுடன் நெருக்கமாக விளையாடி கொண்டிருந்தது.

சிறுவனை சாப்பிட வந்த கொடிய மிருகங்கள் சிங்கத்தை கண்டவுடன், பயந்து நடுங்கி அங்கிருந்து வெகு தூரம் ஓடி விட்டன. சிறுவனுக்கு கொடிய மிருகங்களை அடக்க சக்தி இல்லா விட்டாலும் காட்டிற்கே ராஜாவான சிங்கம் அவனுடனேயே இருந்ததால், அத்தனை கொடிய மிருகங்களும் அந்த சிறுவனை பார்த்தும் பயந்தன.


அதுபோல், சம்சாரமாகிய காட்டில் பயணிக்கும் நம்மை காமக்ரோதங்களாகிய துஷ்ட மிருகங்கள் ஆட்கொண்டு இழுத்து செல்ல காத்திருக்கின்றன. அவைகளிலிருந்து நம்மை காத்து கொள்ள வேண்டுமானால், பகவன் நாமத்தையே ஒருவன் சரணடைய வேண்டும். அப்படி பகவன் நாமத்தை சரணடைந்து அனவரதமும் பகவன் நாமத்தை சொல்லி வரும் பக்தரை எந்த பாவமும் ஒட்டாது. ***பாவங்கள், பகவன் நாமத்துடன் இருப்பவரை கண்டு பயந்து ஓடி விடும்.***

# சேங்கனூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் மண்ணியாற்றங்கரையில் திருப்பனந்தாள் - சோழபுரம் என்ற இரண்டு ஊர்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் அழகான கிராமம் சேங்கனூர்.



**4000**பிரபந்தங்களுக்கும் வியாக்யானம் செய்த ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளையும் மற்றும் சிவபக்தர்களில் முதன்மையானவரான ஸ்ரீ சண்டேஸ்வர நாயனார்




அவர்களும் அவதாரம் செய்த ஸ்தலமும் ஆகும். நாயன்மார்களில் ஒருவரான ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமும் ஆகும்.

நம்முடைய குருநாதர் ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்களின் அவதார பூமியும் இதுவே ஆகும். ஸ்ரீஸ்ரீ அண்ணாவின் அவதார ஸ்தலத்தில் ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தான் நிர்மாணம் செய்யப்பட்டு திவ்ய தம்பதிகளின் அர்ச்சாவதாரமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு க்ரமமாக உத்ஸவங்களும் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீஸ்ரீ அண்ணா பெயரில் ஒரு பசு மடமும் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டும் வருகின்றன.



அரசு ஒத்துழைப்புடன் இந்த ஊரில் உள்ள மூன்று தெருக்களுக்கு முறையே ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை, ஸ்ரீசண்டேஸ்வர நாயனார், ஸ்ரீஸ்ரீ அண்ணா பெயர்களும் வைக்கப்பட்டுள்ளன. ஊரின் நுழைவில் அழகான நுழைவு வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஸ்ரீ அண்ணா மே மாதம் மூன்றாம் தேதி அன்று பரனூரிலிருந்து திருக்கோவிலூரில் உள்ள ஒரு பக்தர் வீட்டிற்கு காரில் கிளம்பி சென்றார். அதே நேரம் சேங்கனூரில் அவருடைய அர்ச்சாவதார திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கண்ணாடி அறைக்கு குளிர்சாதனம் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. அந்த சமயத்தில் அர்ச்சாவதார திருமேனியில் தூசி படாமல் இருக்க பெட்டி போட்டு மூடப்பட்டது.





எப்பொழுது பெட்டி போட்டு மூடினோமோ அதே சமயத்தில் ஸ்ரீஸ்ரீ அண்ணாவால் மூச்சு விட முடியவில்லை; 'காரின் கதவுகளை திற' என்றார். திறந்தவுடன், மூட சொன்னார். உடனே A/Cயை போட சொன்னார். உடனே அணைக்க சொன்னார்.

எப்பொழுதும், இப்படி எல்லாம் சொல்லாத ஸ்ரீஸ்ரீ அண்ணா அன்று அப்படி நடந்து கொண்டது, உடன் இருந்தவர்களுக்கு வியப்பாக இருந்தது. அதே சமயத்தில், நாம் போட்டு மூடிய பெட்டியிலும், முகத்தின் பக்கம் மட்டும் அழகாக திறந்து வைக்கப்பட்டது.

ஸ்ரீஸ்ரீ அண்ணா தான் உகந்த திருமேனியில் ஸர்வ சான்னித்யத்துடன் இருந்து வருவதை எங்களுக்கு உணர்த்தினார். மேலும் மேலும் சிரத்தையுடன் நாங்கள் ஆராதனை செய்ய ஸ்ரீஸ்ரீ அண்ணாவின் கிருபையை பிரார்த்திக்கின்றோம்.

-R.வெங்கடேசன்.

# *GOD இந்தியா டிரஸ்டின் ஆண்டு விழா*

- ஸ்ரீ பாலாஜி ராமச்சந்திரன்

குளோபல் ஆர்கனைசேஷன் பார் டிவினிடி இந்தியா டிரஸ்ட் சார்பாக, வருடாந்திர ஆண்டு விழாவானது **30/04/2016** அன்று, ஸ்ரீபெரும்புதூரில், இராமானுஜர் கூடம் என்கின்ற வன்னியர் மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது.



ஸ்ரீபெரும்புதூரிலுள்ள நாமத்வாரின் செயல்பாடுகளுக்கு திருமால் அடிப்பொடி திரு.பலராமன், பலவிதத்திலும் உறுதுணையாக இருந்து வருகிறார். நாமத்வாரின் பொறுப்பாளராக திரு.சுந்தர் இருந்து வருகிறார். இவ்வருட GOD ஆண்டுவிழாவிற்கு வன்னிய சத்திர நிர்வாகி திரு.ராம ஏழுமலை நிகழ்ச்சி நடைபெற இடம் தந்து உதவினார்.




ஒருநாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இவ்விழாவில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், நாமத்வார் மற்றும் சத்சங்க ஒருங்கிணைப்பாளர்களும், அன்பர்களும் வந்திருந்து தங்கள் செயல்பாடுகளினை அறிக்கை மற்றும் புகைப்பட தொகுப்பினை, அனைவரும் பார்த்து பயனடையும் வண்ணம் அழகாக காட்சிக்கு வைத்து பகிர்ந்து கொண்டனர்.

காலை, GOD இந்தியா டிரஸ்ட்டின் நிறுவனர் திரு.சத்திய நாராயணன் அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியினை இனிதே துவக்கிய பின், திரு.பாலாஜி ராமச்சந்திரன் **GOD** இந்தியாவின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளின் தொகுப்பை எடுத்துரைத்தார். பின்னர், **G O D** இந்தியா முக்கிய ஒருங்கிணைப்பாளர் ராமானுஜம்ஜி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் விழா செய்தியினை எடுத்துரைத்து, கடந்த வருடம் இந்தியாவைத் தவிர பிற நாடுகளில் நடந்த செயல்பாடுகளின் தொகுப்பினை வழங்கினார். தொடர்ந்து **GOD** இந்தியாவின்



அறங்காவலர்களில் ஒருவரும் பிரச்சாரகர்களில் ஒருவருமான முரளிஜி தமிழ்நாட்டிலுள்ள 'நாமத்வார்'களின் கடந்த வருட செயல்பாடுகளை புள்ளி விபரங்களுடன் தொகுத்து வழங்கினார்.

பின்னர், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க காரியதரிசி **Dr.**பாக்யநாதன்ஜி **GOD** இந்தியா தவிர, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் நடைபெற்று வரும் பிற அறக்கட்டளைகளின் கடந்தகால, வருங்கால செயல்பாடுகளின் ஒரு கண்ணோட்டத்தினை வழங்கினார். பின், திரு.பம்மல் பாலாஜி, ஆஸ்ரமம், அதனைச் சுற்றியுள்ள கேந்திராக்கள் மற்றும் ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில் நடைபெறும் செயல்பாடுகளை இனிதே தொகுத்து வழங்கினார். தொடர்ந்து முரளிஜி தமிழ்நாடெங்குமுள்ள சத்சங்கங்களின் செயல்பாடுகளை புள்ளி விபரங்களுடன் வழங்கினார்.

இவற்றிற்கு பிறகு, கோபகுடீர வகுப்புகள் மற்றும் கலை பண்பாட்டுப் போட்டிகளின் ஒருங்கிணைப்பாளராக விளங்கும் டாக்டர்.ஜனனிவாசுதேவன், கோபகுடீரம், சம்ஸ்க்ருதி, புராநவா, மதுரகீதம் மற்றும் உத்யோக் ஆகியவற்றின் கடந்தகால செயல்பாடுகளினை தொகுத்து வழங்கினார். தொடர்ந்து GOD இந்தியாவின் பிரச்சாரகர்களில் ஒருவரான திரு.சனத்குமார், நாமத்வார் மற்றும் சத்சங்கங்களில் ஒருங்கிணைப்பாளர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துரைத்தார்.

பூர்த்தியில், கடந்த வருடம் பிரச்சார சாதனங்கள் மற்றும் வெளியீடுகளை மக்களிடம் அதிகமாக கொண்டு சேர்த்த அன்பர்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது. விழா நடக்க உதவிய அன்பர்களை பாக்யநாதன்ஜி கௌரவித்தார். அன்பர்களுக்கு சிறப்பான பிரசாதம் ஏற்பாடாகி இருந்தது. ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தவாறும் வருங்கால திட்டத்தினை வகுத்தவாறும், தத்தம் ஊர்களுக்கு இனிய நினைவுகளுடனே, அன்பர்கள் திரும்பினர்.

# அத்வைத மோக்ஷம்

–காஞ்சி மஹாஸ்வாமிகள்

'த்ரயம்பகம் யஜாமஹே' என்று ஆரம்பித்து ஒரு மஹாமந்திரம் இருக்கிறது. அது ம்ருத்யுவை ஜயித்தவரான முக்கண்ணரான பரமேஸ்வரனை நாம் ஆராதிக்க வேண்டும் என்று கூறுகிறது. அந்த முக்கண்ணன் எப்படிப்பட்டவர்? நல்ல வாசனை உடையவர். அவர் சமீபம் போனால் திவ்ய கந்தங்கள் வீசும். அவரை தொழுதால் நமக்கு ஐசுவரியங்களும், சந்ததி பெருக்கும், தேஹ ஆரோக்கியமும் ஏற்படும்.

அவரை கேட்க வேண்டிய முக்கிய வரம் யாது? வெள்ளரிப்பழம் தன்னை கட்டுப்படுத்திய காம்பிலிருந்து விடுபடுவது போல், நாம் 'ம்ருத்யு' என்ற சாவிலிருந்து விடுபடுவதற்காக என்று சொல்கிறது வேதம். மோக்ஷத்திலிருந்து விலகி போவதற்கல்ல என்றும் சொல்கிறது.

இவ்விடம் வெள்ளரிப்பழம் போல் என்ற உவமைக்கு ஒரு விசேஷம் இருக்கிறது. செடிகளிலிருந்து பழங்கள் விழுவது பல மாதிரியாக இருக்கிறதை பார்க்கிறோம். மாமரத்திலுள்ள பழம் தன் காம்பிலிருந்து விடுபட்டால் உடனே பூமியில் விழுகிறது. பஞ்சு பருத்திகள் தன் காம்பிலிருந்து விடுபட்டால் அது உயர பறக்கிறது. வெள்ளரியோ பழுத்தால் தன் காம்பிலிருந்து விடுபட்டு அவ்விடமே கிடக்கிறது. அது மேலே பறப்பதுமில்லை; கீழே விழவும் இல்லை. அதுபோல் உள்ளது, பரமேஸ்வரனை உபாசித்து நமக்கு கிடைக்கும் மோக்ஷம். அதாவது மோக்ஷமடைந்தவன் வைகுண்டம், கைலாசம் முதலிய லோகங்களுக்கு பறந்து செல்வதுமில்லை. கீழே நரகத்தில் விழுவதுமில்லை. அவன் விடுபட்ட பின்னும், இவ்விடமே இருக்கிறான். ஆனந்தத்தை இவ்விடமே அனுபவிக்கிறான் என்பது, இந்த மந்திரத்தின் பொருள்.

இவ்வித மோக்ஷம் அத்வைத மோக்ஷம். இதைத்தான் பகவத்பாதர்கள் தன் பாஷ்யத்தில் வற்புறுத்தி இருக்கிறார்கள்.

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

ப்ரயாகையிலேயே ஒரு தென்னாட்டு ப்ராம்மணர் வீட்டிற்கு ப்ரபு செல்லும்பொழுது, கூட்டம் சற்று விலகியதும், இரு சகோதரர்களும் ப்ரபுவின் பின்னாடியே, அந்த ப்ராம்மணரின் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்கள். அந்த ப்ராம்மணர் வீட்டிற்கு வெளியே இருந்த ஒரு சிறு தோட்டத்தில் ப்ரபுவிற்கு ஆஸனம் அமைத்திருந்தார். அதிலமர்ந்து ப்ரபு இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தபோது இவ்விருவரும் அவரது சரண கமலங்களில் ஸாஷ்டாங்கமாக வணங்கினர். ரூபரை தனது சரணத்தில் கண்ட ப்ரபு உடனே அவசரமாக எழுந்து நின்று அவரை தனது மார்போடு அணைத்துக் கொண்டு, அவரது தலையை தனது கோமளமான கரங்களால் வருடினார்.

மஹாப்ரபு மீண்டும் அமர்ந்து கொண்டதும், இருவரும் அவரது பாதங்களை பற்றிக் கொண்டே அமர்ந்தனர். அனூப் யார் என்று கேட்டு தெரிந்து கொண்டார் ப்ரபு. அனூப் ப்ரபுவை தரிசிப்பது இதுதான் முதன்முறை. பின்பு, ப்ரபு ஸனாதனரைப் பற்றி அறிய விரும்பினார். ஸ்ரீரூபரும் முழு வ்ருத்தாந்தத்தையும் கூறி, ‘ப்ரபோ! சிறையில் இருந்து கொண்டு, உங்கள் திருவடிகளை தரிசிக்க அவர் துடித்துக் கொண்டிருப்பார்’ என்று கூறினார்.

ப்ரபு சிரித்துக் கொண்டே, ‘அவர் இப்பொழுது சிறையில் எங்கு இருக்கிறார். அங்கிருந்து வெளியேறியிருப்பார். பகவான் இஷ்டம் இருந்தால், நீங்கள் இருவரும் கூடிய சீக்கிரமே சந்திப்பீர்கள். இப்பொழுது நீ சில காலம் என்னுடன் தங்கு’ என்று கூறினார். அவர் இருக்கும் இடத்திலேயே இவ்விருவரும் தங்கும்படி ஏற்பாடுகளும் செய்தார். அன்றே அவர்களுக்கு ப்ரபுவின் ப்ரஸாத அன்னமும் கிடைத்தது. இப்படியாக இரு ஸகோதரர்களும் ப்ரபுவின் ஸேவையில் ஆனந்தமாக இருந்தார்கள்.

இப்படியாக ரூபரும் அவரது ஸஹோதரர் அனூபும் ப்ரயாக க்ஷேத்ரத்தில் பத்து நாட்கள் வரை ப்ரபுவின் சரணகமலத்தின் அருகேயே வாஸம் செய்தார்கள். இவர்

வித்வானாகவும், பாவுக பக்தராகவும், மேதாவியாகவும், அனைத்துக்கும் மேல் ப்ரபுவின் க்ருபா பாத்திரமாகவும் இருந்தார். பின் இவர்களின் க்ஷேமத்தை குறித்து ஏதாவது ஸந்தேகம் இருக்குமா என்ன? குரு சரணங்களை ஆச்ரயித்து அவரது க்ருபைக்கு பாத்திரமான பின், ஒருவன் அழியக்கூடிய இந்த உலகத்திலும் அதன் அல்ப ஸுகங்களிலும் மனதை செலுத்த முடியுமா என்ன? ஹம்ஸ பறவை ஒரு நாளும் காக்கையின் உணவைத் தேடிச் செல்லாதன்றோ? பகவானேதான் ஸத்குருவின் உருவில் தோன்றுகிறார். அந்த ப்ரம்மத்தின் ரூபம்தான் ஸத்குரு. ஸ்ரீரூபரின் த்ருஷ்டியில் மஹாப்ரபு ஸாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ணனே! தனது குருவை க்ருஷ்ணராக எண்ணியே அவர் ஸ்ரீக்ருஷ்ண லீலைகளை வர்ணித்துள்ளார். சைதன்ய தேவர் பகவானின் அவதாரம் என்பதை நிலைநாட்ட, ரூபர் தனது எழுத்துக்களில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. காரணம், மஹாப்ரபுவை க்ருஷ்ணரைக் காட்டிலும் வேறாக எண்ணினால் அன்றோ அப்படி ஒரு முயற்சி எடுக்க வேண்டும் என்று தோன்றும். இந்த பத்து நாட்களில் ப்ரயாகையிலிருந்து கொண்டு மேதாவியான ஸ்ரீரூபர், மஹாப்ரபுவிடமிருந்து பக்தியின் மிக சூக்ஷ்மமான நுணுக்கமான ரஹஸ்யங்களை க்ரஹித்து கொண்டார். இவைகளையே அவர் தனது எண்ணற்ற புத்தகங்களிலும் விவரித்தார்.

ரூபரின் இதயத்தின் நாட்டத்தை ப்ரபு நன்கறிந்திருந்தார். ஆதலால் அவருக்கு வைராக்யத்தை உபதேசிக்கும் பொருட்டு கூறலானார், ‘ரூப்! இவ்வுலகத்தில் ஸம்ஸாரத்தில் சிக்கியுள்ள ஜனங்கள் எப்படி விஷய போகங்களில் பித்தாக இருக்கிறார்கள். பதவி, புகழ், பணம், ஸந்ததி மற்றும் பிடித்த பொருட்களை சேகரிப்பது போன்றவற்றிலேயே உயர்ந்த, ஈடில்லாத இந்த மனித வாழ்க்கை வீணாகிவிடுகிறது. காமினி, காஞ்சனம், கீர்த்தி என்ற இந்த மூன்று கயிறுகள்தான் ஜீவனை இறுகக் கட்டிப் போட்டிருக்கின்றன. இதனால் ஜீவனால் சிறிது கூட அப்படி இப்படி நகர முடிவதில்லை. இம்மூன்றும் இருக்கும் இடத்தின் எதிர் திசையில் இருக்கிறது பகவானை அடையும் வழி.’

(தொடரும்)

# வீடு தேடி வருவான் விட்டலன் -28

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஶ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

---

## ஶ்ரீஞானேஸ்வரர்-17 **ஞானேஸ்வரீ**

மேவாஸா எனும் ஊரில் ஒரு வீட்டில் சச்சிதானந்தம் என்ற மனிதன் இறந்து விட்டான். அவன் மனைவி 'ஓ'வென அழுது கொண்டிருந்தாள். ஞானேஸ்வரர் கருணை நிரம்பியவர். அழும் அந்த பெண்ணைப் பார்த்து, 'ஏன் அழுகிறாய்?' என கேட்டார். அவள், 'என் கணவன் இறந்து விட்டான். நான் அழாமல் என்ன செய்வது?' என்றாள். உன் கணவன் பெயர் என்ன என்றார் ஞானேஸ்வரர். அந்தப் பெண், 'சச்சிதானந்தம்' என்றாள். ஞானேஸ்வரர் (கைகொட்டி சிரித்தவாறு) 'சச்சிதானந்தம் எங்கேயாவது செத்துப் போகுமா? சத், சித், ஆனந்தம், சத், சித், ஆனந்தம்!' என்றார்.

இப்படி வேடிக்கையாக ஞானேஸ்வரர் சிரித்து பேச, பேச, அவர் கை தட்டல்களுக்கு நடுவே, அந்த இறந்து போன சச்சிதானந்தம் எழுந்து உட்கார்ந்து விட்டான். அவனுக்கு உயிர் வந்து விட்டது. ஆனால் எழுந்து உட்கார்ந்த சச்சிதானந்தம் ஞானேஸ்வரர் பின்னாலேயே சென்றான். ஞானேஸ்வரர், கல்லேஸ்வரர் கோவிலுக்குச் சென்றார். அந்த கோவிலில் அந்தக் காலத்தில், பெரிய பெரிய பிரம்மாண்டமான தூண்கள் இருந்தன. அப்படி இருந்த ஒரு கல் தூணில், சாய்ந்து கொண்டு, பகவத் கீதைக்கு பாஷ்யம் இயற்றினார் ஞானேஸ்வரர். கோயில் சிதிலமடைந்த பிறகு, எல்லா தூண்களும் எங்கே போனாலும், இந்த தூணை மட்டும் பத்திரப்படுத்தி வைத்து போற்றி வருகின்றனர்.

பகவத் கீதை என்பது சகல இந்துக்களுக்கும் பொதுவான ஒரு நூல். இதன் பெருமையை சொல்லாதவர்களே கிடையாது. 'கீதா, கீதா என்று சொல்லிக் கொண்டு இருந்தால் தாகி, தாகி என்று வரும். தாகி என்றால் தியாகம் என்று பொருள். தியாகம் தான் கீதையின் சாரம்' என்று ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்வதுண்டு. இந்த பகவத்கீதைக்கு பாஷ்யத்தை மராட்டிய மொழியில் தனது 14வது வயதில் 1283

ஆம் வருடத்தில், மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக எழுதினார் ஞானேஸ்வரர். அவர் கல்தூணில் சாய்ந்து கொண்டு சொல்ல, சொல்ல அவரருகே அமர்ந்து அனைத்தையும் எழுதியது, அவர் உயிர் பிழைப்பித்த சச்சிதானந்தம்.

கோயிலில் இப்பொழுது ஞானேஸ்வரர் சாய்ந்து நின்று கொண்டிருந்த தூணை ஸ்வாமியாக வணங்கி வருகிறார்கள். கல்லேஸ்வரரை விட இந்த தூணிற்குத்தான் அதிக அளவில் பூஜை எல்லாம் நடக்கும். வஸ்திரம் சாற்றி, மாலை இட்டு, புஷ்பங்கள் சமர்ப்பித்து, பூஜை செய்து, ஆரத்தி காட்டி வணங்குவர். இந்த தூணின் மேல் ஞானேஸ்வரர் எழுதிய அந்த பகவத் கீதையின் பாஷ்யமான 'பாவார்த்த தீபிகை' வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த தூணின் மேல் சந்திரன், சூரியன் பொறிக்கப்பட்டு இருப்பதை இன்றும் காணலாம். உலகில் சந்திரன், சூரியன் இருக்குமளவு இந்த ஞானேஸ்வரர் எழுதிய ஞானேஸ்வரி எனப்படும் 'பாவார்த்த தீபிகை' இருக்கும். அதைத்தான் தூணில் பொறிக்கப்பட்ட அந்த சந்திர, சூரியர்கள் தெரிவிக்கின்றன.

(தொடரும்)


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

## சனாதனப்புதிர் பகுதி 86 -- விடைகள் -ஆத்ரேயன்

1. 92 ஸ்லோகங்கள்.
2. 12 அத்யாயங்கள்; 600 ஸ்லோகங்கள்.
3. 18 அத்யாயங்கள்; 300 ஸ்லோகங்கள். முனிவர் கங்கா.
4. 4 அத்யாயங்கள்; 227 ஸ்லோகங்கள்.
5. 4 அத்யாயங்கள்; 542 ஸ்லோகங்கள்.
6. 19 அத்யாயங்கள்; 1000 ஸ்லோகங்கள். விசேஷம் இடை இடையே உரைநடைப்பகுதி காணப்படுகிறது.
7. 100 அத்யாயங்கள்; 2000 ஸ்லோகங்கள். விசேஷம் இடை இடையே உரைநடைப்பகுதி காணப்படுகிறது.
8. 4 அத்யாயங்கள்; 220 ஸ்லோகங்கள்.
9. 9 அத்யாயங்கள்.
10. 3 காண்டங்கள்; 1023 ஸ்லோகங்கள்.
11. 100ஸ்லோகங்கள்.

## சனாதனப்புதிர் பகுதி 86 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. லிகித சம்ஹிதையில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன?
2. பராசர சம்ஹிதையில் எத்தனை அத்யாயங்கள் ஸ்லோகங்கள் உள்ளன?
3. சங்க சம்ஹிதை இது எத்தனை ஸ்லோகங்கள் கொண்டது? இதை இயற்றியவர் யார்?
4. சம்வர்த்த சம்ஹிதையில் எத்தனை அத்யாயம் ஸ்லோகங்கள் உள்ளன?
5. சதாதய சம்ஹிதையில் எத்தனை அத்யாயம் ஸ்லோகங்கள் உள்ளன?
6. வசிஷ்ட சம்ஹிதையில் எத்தனை அத்யாயம் ஸ்லோகங்கள் உள்ளன? இதன் விசேஷம் என்ன?
7. விஷ்ணு சம்ஹிதையில் எத்தனை அத்யாயம் ஸ்லோகங்கள் உள்ளன?
8. வியாஸ சம்ஹிதையில் எத்தனை அத்யாயம் ஸ்லோகங்கள் உள்ளன?
9. ஔசநசம் சம்ஹிதையில் எத்தனை அத்யாயங்கள் உள்ளன?
10. யாக்ஞ வல்கிய சம்ஹிதை எத்தனை காண்டங்கள் கொண்டது? எத்தனை ஸ்லோகங்கள்?
11. யம சம்ஹிதையில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன?

## *பாலகர்களுக்கு ஒரு கதை*



# *பெரிய வகுப்பு!*

சங்கரன் குட்டி பையன். அவன் நண்பர்களுடன் எப்பொழுதும் கலகலப்பாய் இருப்பான். ஆனால் அன்று மாலை என்னவோ ஒரே மௌனமாக இருந்தான். அப்பா வந்து சங்கரனை என்னென்னவோ சொல்லி சமாதானப்படுத்தி பார்த்தார். சங்கரன் வாயை திறப்பதாக காணோம்.

இந்த மாதிரி சமயங்களில் சங்கரனை கூட்டிக்கொண்டு காற்று வாங்க அமைதியான இடங்களில் நடந்து வருவார் அப்பா கோபால். உடனே சங்கரன் முன்போல் ஆகி விடுவான். அன்றும் அவர் சங்கரனை அழைத்து கொண்டு வாக்கிங் கிளம்பினார். சங்கரனும் அப்பா கோபாலின் பின்னால் மௌனமாக அவர் கைகளை பிடித்து கொண்டே கிளம்பினான்.

மௌனமாக இருவரும் நடந்து நடந்து செல்ல கொஞ்சம் கொஞ்சமாக சங்கரன் தெருக்களில் கவனம் செலுத்துவதை கவனித்து வந்தார் தந்தை. இதுதான் சரியான சமயம் என்று அவர் சங்கரனை பார்த்து, 'சங்கரா! ஏன் மிகவும் அமைதியாக இருக்கிறாய்? அப்பாவிடம் என்ன விஷயம் என்று சொல்ல கூடாதா?' என்று கேட்டார்.

சங்கரன் அப்பாவின் கைகளை அழுத்தி பிடித்து கொண்டே, 'அப்பா! இந்த வருடம் நான் ஒன்பதாவது படிக்கிறேன் அல்லவா? அடுத்த வருடம் பத்தாவது' என்றான். சொல்லி விட்டு கோபாலையே பார்த்தான்.

அப்பா கேட்டார், 'ஆமாம்! அதற்கென்னடா. புது விஷயம் போல் பேசுகிறாய். ஏன் அதற்கு என்னவாயிற்று' என்றார்.

சங்கரன், 'அப்பா! அதற்கு நிறைய படிக்க வேண்டும். நிறைய மதிப்பெண்கள் எடுக்க வேண்டும். நினைத்தாலே கவலையாக இருக்கிறது. எப்படி படிப்பேனோ' என்று பேசினான். அவன் முகம், அவன் கவலை நிஜமாகவே இருந்தது என்பதை காட்டியது. ஆனால், அது தேவையற்ற

கவலை என கோபாலுக்கு புரிந்தது. அவருக்கு தெரியும் சங்கரன் நன்கு படிக்க கூடிய புத்திசாலி பையன்தான். அவனுடைய இந்த நியாயமற்ற கவலையை எப்படி விலக்குவது?

மேலும் நடக்க நடக்க, குறுக்கே ஒரு குன்று வந்தது. அதை பார்த்தவுடன், கோபால் சங்கரனை பார்த்து, 'என்னடா சங்கரா! இவ்வளவு பெரிய குன்று நம் குறுக்கே வந்து நிற்கிறதேடா! என்ன செய்வது' என கேட்டார்.

தொடர்ந்து அவரே, 'சங்கரா குன்றை தூக்கி தோளில் வைத்து கொள்வோமா?' என்றார். சங்கரனுக்கு அந்த கேள்வி அபத்தமாய் பட்டது. கோபாலை பார்த்து, 'அப்பா குன்றை எப்படி தூக்குவது அப்பா? அது எவ்வளவு பெரியது. பளுவானதும் இல்லையா? முட்டாள்தனமாய் பேசுகிறீர்களே' என்றான்.

குன்றிற்கு அந்த பக்கம் செல்ல வேண்டும்; என்னதான் செய்வது என்றார் கோபால். குன்றை சுற்றி செல்வதற்கு ஏதாவது வழி இருந்தால் அப்படி போய் விடுவோம் என்றான் சங்கரன்.

அதை கேட்ட கோபால், 'சரியாக சொன்னாய் சங்கரா! குன்றை தூக்கி கொண்டு போக முடியாது. எவ்வளவு யோசித்தாலும் அது சாத்தியமாகாது. அதை தாண்டுவதற்கு தகுந்த வழி தேட வேண்டும். சரிதானே' என்றார். ஆமாம் என்றான் சங்கரன்.

கோபால் உடனே, 'அதுபோலத்தானே சங்கரா, நீயும் பத்தாம் வகுப்பை எப்படி படிப்போமோ என்று நினைத்து கவலைப்படுவதால் ஏதாவது ஆகி விடுமோ? கவலையால் ஒன்றும் ஆக போவதில்லை. உற்சாகமாய் இரு. பத்தாம் வகுப்பு படிக்கையில் பாடங்களை நன்றாக கருத்தூன்றி கவனமாக படி. அவ்வளவுதான். பத்தாம் வகுப்பை அனாயசமாக தேறி நல் மதிப்பெண் பெறுவாய். அதற்கு இப்பொழுதிலிருந்து கவலைப்படுவானேன்?' என்றார்.

சங்கரனுக்கு அது நன்கு விளங்கியது. அவன் முகம் தெளிந்து முன்போல் மலர்ந்தது. அவனும் கோபாலும் இப்பொழுது உற்சாகமுடன் வீடு நோக்கி நடந்தார்கள்.

**மே 11 -** பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹத்துடன் நமது பாடசாலை வித்யார்த்திகளும், அத்யாபகர்களுமே முழுக்க பங்கேற்று நடத்த, ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிகளுக்கு ப்ரத்யக்ஷமான **திருவல்லிக்கேணி ஸ்ரீபாண்டுரங்கன் கோயில் சம்ப்ரோக்ஷணம்** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மிக சிறப்பாக மே 11 காலை நடைபெற்றது. பாண்டுரங்கன் ருக்மிணியுடன் சன்னதியில் தக, தகவென ஜொலித்து அழகாய் இருந்தான். 9ஆம் தேதி அன்று யாகசாலை பூஜைகள் ஆரம்பித்து இருந்தன. சம்பிரதாய ருக்மிணி கல்யாணம் இடம் பெற்றிருந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் பாண்டுரங்க பஜனையை பக்தர்கள் வீதிகளில் செய்து மகிழ்ந்தனர். அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

**ஏப்ரல் 25** நமது **ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் சம்ப்ரோக்ஷணம்** ஆகி சற்றேறக்குறைய பன்னிரெண்டு வருடங்கள் ஆகி இருந்தன. சில பழுது பார்க்க வேண்டிய வேலைகளும், வர்ணபூச்சுகளும் செய்ய வேண்டி இருந்தது. அவைகள் பூர்த்தி ஆகி ஏப்ரல் 25 அன்று காலை 9 மணி அளவில் லகு சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. நமது பாடசாலை வித்யார்த்திகளே முழுவதுமாக இந்த சம்ப்ரோக்ஷணத்தை நடத்தினார்கள். சிறிய அளவில் செய்தால் போதும் என்று யாவருக்கும் தெரிவிக்காத போதும் பக்தர்கள் தானாகவே கேள்விப்பட்டு கூடி விட்டார்கள். மாலை பத்மாவதி கல்யாணம், புறப்பாடுடன் சம்ப்ரோக்ஷணம் பூர்த்தி ஆயிற்று.

**சிதம்பரம் பாடசாலை** - மே 9 - சிதம்பரம் ஆனந்த நடனசபேச வேதபாடசாலையில் அத்யயனம் செய்த வித்யார்த்திகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவில் பங்கேற்று, ஸ்ரீஸ்வாமிஜி அருளாசியும் சான்றிதழ்களும் வழங்கினார்கள்.

**மே 13 - 22** மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்பாக ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு **வசந்தோத்ஸவம்** நடைபெற்றது. தினமும் ப்ரேமிகவரதன் மாலை அலங்காரங்களில் அழகாக எழுந்தருள, கீர்த்தனம் பாடப்பட்டது. பக்தர்களுக்கு பிரசாதமும் வழங்கப்பட்டது. பூர்த்தி அன்று அழகான பல்லக்கில் ஸ்ரீப்ரேமிகவரதன் புறப்பாடும் கண்டருளினான்.

**ஏப்ரல் 27 - 29** டாக்டர்.பாக்யநாதன்ஜி, திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில் பாகவத தர்மம் தலைப்பில், **'**கலியையும் பலி கொள்ளும்**'** ஸ்ரீஸ்வாமிஜியின் **16**அடிகள் கொண்ட மஹாமந்திர கீர்த்தனத்தை அடிப்படையாக கொண்டு, உபன்யாசம் நிகழ்த்தினார். **மே 1**ஆம் தேதி நமது கோபகுடீர சத்சங்க குழந்தைகள், மிக அருமையான பக்த மீரா நாடகம் நடத்தி பரிசு பெற்றனர். **மே 10** திருவண்ணாமலை *யோகிராம்சுரத்குமார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி*யில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

**அமெரிக்கா சத்சங்கங்கள்**

பூர்ணிமாஜியின் சத்சங்கங்கள் கனடா மற்றும் அமெரிக்காவில் தொடர்ந்து ஸ்ரீஸ்வாமிஜியின் பூரண அருளாசிகளுடன் இடம் பெற்று வருகின்றன. நாமத்வார் இணைய தளத்தில் விவரங்கள் பார்த்து உங்களுக்கு தெரிந்தோரை எல்லாம் கலந்து கொள்ள செய்து பயனுற செய்யுங்கள். ஏப்ரல் **22** முதல் **24** வரை க்ருஷ்ண பக்தி சாம்ராஜ்யம் தலைப்பில் டல்லஸ் கோவிலில் புரந்தரதாசர், ஆண்டாள், மீரா ஆகியோர் சரித்திரத்தை நூற்றைம்பதுக்கும் மேற்பட்டோர் முன் உபன்யாசம் செய்தார். இதில் மாதுரி ஸகீ மற்றும் ப்ரேமிகவரதனிடையே நகுல உற்சவமும் இடம் பெற்றிருந்தது.

ஏப்ரல் **25** முதல் மே **3**வரை தினமும் கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளுக்கு பிறகு ப்ரீமோண்ட் சித்தி விநாயகர் கல்சரல் சென்டரில் ராமாயணத்தை நவாஹமாக நூற்றுக்கும் மேற்பட்டோர் முன் உபன்யாசம் செய்தார். தொடர்ந்து மே **8** வரை ராமாயண ரத்தினங்கள் என்ற தலைப்பில் சியாட்டில் வேத கோவிலில் செய்த உபன்யாசத்தின் முடிவில் **50**க்கும் மேற்பட்டோர் முன்னிலையில் ராதா கல்யாணமும் இடம் பெற்றிருந்தது. சியாட்டிலில் சில சத்சங்கங்களுக்கு பிறகு, **'**ராமம் பஜே சியாமளம்**'** என்ற தலைப்பில் மின்னியாபோலிஸ் பாலாஜி கோவிலில் **15**ஆம் தேதி வரை நான்கு நாட்கள் பேசினார். மின்னியாபோலிஸ் இந்து கோவிலில் துளசிதாசர் பற்றியும் உபன்யாசம் செய்தார். கனடாவில் சத்சங்கங்களிலும், கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

**வளைகுடா சத்சங்கங்கள் -** நமது மஸ்கட் **GOD** சத்சங்கத்தினர்

அனைவரும் ஒன்று கூடி பல நிறுவனங்களுக்கு சென்று கார்பரேட் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். கார்பரேட் நிறுவனங்களிலிருந்து சுமார் **240 Staff Members** கலந்து கொண்டு மிகவும் பயனுற்றனர். **Transformational Leadership, Leadership communication, Negotiation & Supervisory skills, Driving operational efficiency and many other topics were covered.** தமிழ்சங்கத்திற்காக ஒரு நிகழ்ச்சியும் இருந்தது. இதில் **350**அன்பர்கள் கலந்து கொண்டனர். **Positivity**யை மையமாக கொண்ட நிகழ்ச்சியான இதில் கலந்து கொண்டவர்கள் நிகழ்ச்சியை மிகவும் பாராட்டினர். இதற்காக ஒரு மாதம் அயராது உழைத்தனர். மஸ்கட் **GOD** சத்சங்கத்தினரின் அயராத ஒரு மாத உழைப்பால் இது வெற்றிகரமாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

***காவேரிப்பாக்கத்தில்(***தமிழகம்) மே **2 - 11** வரை முரளிஜி **ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் 250**அன்பர் முன்னிலையில் செய்தார்.

**ராமானுஜர் ஜெயந்தி**யை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் சார்பாக, **'**திருமால் அடிப்பொடி**'** திரு.பலராமன் மற்றும் அன்பர்கள், நீர் மோர் பக்தர்களுக்காக வழங்கினர். அன்னதானமும் நடைபெற்றது.


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

*- ஜனனி*



*ஸ்ரீ ஹரி பாபாஜி - 5*

நிர்குண ப்ரம்மத்திலேயே ரமிக்கும் முனிவர்களும் கூட, ஹரியின் குணங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு அவனிடம் எதையும் எதிர்பார்க்காமல் பக்தி செய்கின்றனர்.

ஸ்வத:ப்ரகாஷ்ஜி நித்யம் ஹனுமான்கடீக்கு செல்லலானார். கீர்த்தனத்தில் அவருக்கு ருசி வளர்ந்து கொண்டே வந்தது. பாவத்தில் அவர் ந்ருத்யம் செய்ய ஆரம்பித்துவிடுவார். இதை அறிந்த அச்யுதமுனி, அவரை மிகவும் கடிந்து கொண்டார் - 'காலையில் என்னிடம் வேதாந்த பாடம் கேட்கிறாய்! மாலையில் பக்தர்கள் கூட்டத்தின் நடுவில் ஆடி பாடுகிறாய்! த்வைத உபாஸனை என்றால் அதை செய்ய வேண்டும். அத்வைத உபாஸனையானால் அதை செய்ய வேண்டும். இரண்டையும் சேர்ந்து செய்வது என்பது இயலாத ஒன்று. ஒன்று வேதாந்த படிப்பை நிறுத்திவிடு அல்லது இந்த ஆட்டம்-பாட்டத்தையெல்லாம் நிறுத்து' என்று கூறிவிட்டார்.

இதை கேட்டதும் அச்யுத முனியை நமஸ்கரித்துவிட்டு, வேதாந்தத்திற்கும் ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு, அந்த இடத்தை விட்டு கிளம்பி ஹனுமான்கடீக்கு வந்தார். அங்கேயே வஸித்து பஜனையும் கீர்த்தனையும் செய்ய ஆரம்பித்தார். திருபராஞ்ஜ்பே அவர்களின் ஸங்கம் அவருக்கு மிகவும் ப்ரியமாக இருந்தது. பராஞ்ஜ்பேவிற்கு இதுபோன்ற ஒரு பாவுக பக்தரின் ஸங்கம் கிடைத்ததே என்று மிகவும் ஸந்தோஷம். இவரது வற்புறுத்தலின் பெயரில் ஸ்வத:ப்ரகாஷ் மஹாராஜ் ஹனுமான்கடீயில் **'Lord Gauranga'** புத்தகத்தை ஒட்டி சைதன்ய சரித்திரத்தை ஹிந்தியில் ப்ரவசனம் செய்தார். ஒரு சிறந்த பக்தரிடமிருந்து பக்தாவதாரமான கௌராங்கரின் கதையை கேட்டு ஷ்ரோத்தாக்கள் பரமானந்தம் அடைந்தனர்.

சில நாட்கள் கழிந்த பின் இங்கிருந்து புறப்பட்டுவிட்டார். அனூப்ஷஹர் அருகில் கவான் என்ற க்ராமத்திற்கு சென்றார்.

அங்கிருந்த செல்வந்தர் மற்றும் செல்வாக்குடையவரான பக்த லாலா குந்தன்லால்ஜி மற்றும் அவரது உறவினரான ஹீராலால்ஜியுடன் முதல் முறை ப்ருகு க்ஷேத்திரத்திற்கு வந்திருந்தபோதே, ஸ்வத:ப்ரகாஷ்ஜிக்கு ப்ரேம ஸம்பந்தம் ஏற்பட்டு இருந்தது.

இந்த முறை கவான் மற்றும் அக்கம் பக்கம் இருந்த ப்ரேரா, நிஜாம்புர், ஷிவபுரி, பிராவடி போன்ற க்ராமங்களுக்கு சென்று பக்தர்களை தேடலானார். அப்படி கிடைத்த பக்தர்களை கொண்டு ஆங்காங்கு ஸங்கீர்த்தன யக்ஞம் ஏற்பாடு செய்தார்.


கீர்த்தனம் செய்வதும் மற்றவர்களை கீர்த்தனம் செய்விப்பதும் அவரது வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக ஆனது. ஜாதி மத பேதமின்றி அவர் எல்லோரையும் ஹரி நாம ஸங்கீர்த்தனம் செய்ய வைப்பதில் தீவிரமாக இருந்தார்.

ஒரு முறை ஆனி மாதத்தில் ப்ரேராவிலிருந்து கவான் க்ராமத்திற்கு ஹரிநாமம் சொல்லிக் கொண்டே வந்து கொண்டிருந்தார். வழியில் வயதான ஒரு குயவனைக் கண்டார். அந்த முதியவரோ தலையில் மண்பாண்டங்கள் நிறைந்த ஒரு கூடையை சுமந்தவாறு, ஸிந்தௌலி எனும் க்ராமத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார். அவரை பார்த்தால் மிகவும் சோர்ந்தவர் போல் தெரிந்தார். இன்னும் ஸிந்தௌலி 3மைல் தொலைவில் இருந்தது.

அந்த முதியவரிடம் ஸ்வத:ப்ரகாஷ் மஹாராஜ், 'ஐயா! நீங்கள் மிகவும் சோர்ந்து காணப்படுகிறீர்கள். சிறிது நேரம் நிழலில் இளைப்பாரிய பின் செல்லலாம். உமது தலையிலிருந்து கூடையை நான் இறக்கி வைக்கிறேன்' என்று கூறி கூடையை இறக்கி வைத்தார். சிறிது நேர ஓய்விற்கு பின் அந்த குயவன் மீண்டும் தன் பயணத்தை தொடங்க யத்தனித்த போது, அவர், 'இப்போது இந்த கூடையை என் தலையில் ஏற்றிவிடுங்கள். நீங்கள் ஹரிநாமம் சொல்லிக் கொண்டே என்னை பின் தொடருங்கள். உங்கள் வேலையை நான் செய்கிறேன். என் வேலையை நீங்கள் செய்யுங்கள்' என்று கூறினார்.

(தொடரும்)

Bhagavatha Dharma - The path for All - A Discourse based on "Kaliyaiyum Bali Kollum" - the famous Mahamanthra Kirtan of Sri Swamiji consisting of 16verses. The discourse in English was given by Dr.Bhagyanathanji in Australia.







There are many accounts of genuine seekers who, over the years, have traveled to India and found their calling at the feet of an Indian saint. This author, though, was not a seeker. In fact, he was one who traveled from India to the USA in search of comforts and prosperity. Yet in this materialistic Age when true seekers are few, divinity itself seeks out people to shower Its grace on! This book is a compelling, honest account of how one who was leading a routine mundane life of work and home in the US, was transformed after he was brought, purely by divine grace, into the divine company of a great saint and the Mahamantra. The Master and the Mahamantra are presented here from the inspiringly insightful, rational yet straight-from-the-heart perspective of the author, that brings out the accessibility and tangibility of that grand divinity. This book is a must-read for any seeker!




Pranams at the Holy feet of
Sri Sri Swamiji

**உங்களின் அனைத்து விதமான**
**போட்டோகிராபி மற்றும்**
**வீடியோ தேவைகளுக்கு அணுகவும்**



**ராஜா - 9840572481**

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை Email, SMS அல்லது தொலைபேசி மூலமாக தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். **Email : help-desk@madhuramurali.org Phone : "24895875" SMS : 9790707830**


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## சத்சங்க நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | ஜூன் 1, 16 & 30 ஜூலை 16 & 30<br>June 1, 16 & 30 July 16 & 30 |
| மே 26, 27 | திருச்சி நாமத்வார் திறப்பு, சீதா கல்யாணம் |
| மே 29 | பெங்களூரு நாமத்வார் திறப்பு |
| ஜூன் 5 | சிதம்பரம் நாமத்வார் திறப்பு |
| ஜூன் 6 | விருதுநகர் அம்பாள் மண்டபம் -Nr MSP PARK மாலை |
| ஜூன் 7 | சிவகாசி Coronation School மாலை |
| ஜூன் 9 | அருப்புக்கோட்டை அமிர்தலிங்கேஸ்வரர் கோயில் - மாலை |
| ஜூன் 12 | வைதீகஸ்ரீ பத்திரிக்கை விழா - தத்வலோகா ஆடிட்டோரியம், சென்னை |
| ஜூலை 20-29 | அகில பாரத சாம வேத சம்மேளனம் - பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் |
| ஜூலை 6 | சைதன்யகுடீரம் ஜகன்னாதர் ரதோத்ஸவம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.

Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org எனும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**